மைய அரசும், மாநில அரசும் 50—50 என்று பகிர்ந்துக்கொள்ளவும் முன் வந்தால்தான் கைத்தறித் துணித் தேக்கம் போக்கப்பட்டு, நெசவாளர்களுடைய வாட்டம் போக்கப்படும். இது பற்றி மாநில அரசு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் மைய அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அண்மையில் மைய அரசு நிதியமைச்சர் அவர்களை தமிழ்நாட்டிலிருந்து கைத்தறி நெசவாளர்களுடைய தூதுக் குழு சென்று வற்புறுத்தி இருக்கிறது.

திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, சில்லறை விற்பனை, மொத்த விற்பனை, இரண்டில் எந்த விற்பனை அதிகமாக உள்ளது? தள்ளுபடி அளிப்பதில் சில்லறை விற்பனை, மொத்த விற்பனை, எந்த விற்பனை அதிகமாகப் போகிறது. தள்ளுபடியில் ஆண்டுக்குச் செலவு எவ்வளவு ஆகிறது. இதில் மைய அரசும் மாநில அரசும் எவ்வளவு பங்கேற்றுக் கொள்கின்றன என்ற விவரங்களை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 100க்கு 60 அல்லது 70 சதவீதம் மொத்த வியாபாரத்தில் கைத்தறியினுடைய விற்பனை அதிகமாகியிருக்கிறது. விற்பனை அதிகமாவதால் மொத்த வியாபாரத்தில் தான் ரிபேட் அதிகமாக கொடுக்கவேண்டியிருக்கிறது. ரிபேட் தொகையை ஆரம்ப கூட்டுறவு நெசவாளர் சங்கம் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் இரண்டுக்கும் 1981—82ல் 5 கோடியாகவும், 1982—83ல் சுமார் 13 கோடியாகவும், 1983—84ல் சுமார் 12 கோடியாகவும், 1984—85ல் 16 கோடியாகவும், 1985—86ல் 17 கோடியே 60 இலட்சமாகவும் மத்திய அரசு மாநில அரசு கொடுத்து வருகிறது.

### 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிரிடு குத்தகைதாரர்கள் (தனி விதித்துறைகள்) சட்ட முன்வடிவு 1986.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

'' தமிழ்நாடு 1986-ஆம் ஆண்டு புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிரிடு குத்தகைதாரர்கள் (தனி விதித்துறைகள்) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டத்தினுடைய சட்ட விளக்கங்களைப் பற்றி பின்னால் சொல்லலாம் என்றாலும் கூட, இதிலே புரொசீஜரல் பார்மில் ஒரு தவறு இருக்கிறது என்பதைப் பற்றி

இந்த அவையினுடைய கவனத்தை ஈர்த்து என்னுடைய எதிர்ப் பாகச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டத்தினுடைய தமிழ் பதிப்பிலே 60 ஆம் பக்கத்திலே பல ஊர்களைப் பற்றி சொல்லி யிருக்கிறார்கள். ஆனால், திருநெல்வேலியில் தென்காசியைச் சார்ந்த..............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எந்த ஊர் விட்டுப்போனது என்பதைப் பற்றி டிஸ்கஷனிலே பேசலாம்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற் றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள பயிரிடு குத்தகை தாரர்கள் (தற்காலிக நிவாரணம்) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர் மானத்தை மொழிகிறேன்:—

'' தமிழ்நாடு 1986-ஆம் ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட பகுதிகளிலுள்ள பயிரிடு குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரணம்) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற் றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(இ) திறந்த வெளிகள் (அழகைக் குலைத்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு, 1986.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—